தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

வியாழக்கிழமை, 1979 ஏப்ரல் 26

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

கோவை சிந்தாமணி சிறப்பங்காடி

*வினா எண். 824 திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவையிலுள்ள சிந்தாமணி சிறப்பங்காடிகள் கணக்குகள் இதுவரை தணிக்கை செய்யப்பட்டுள்ளனவா?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த ஆண்டு வரை தணிக்கை செய்யப்பட்டுள்ளது?

(இ) தணிக்கை அறிக்கை பேரவை முன் வைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :

(அ) & (ஆ) ஆம். கோவை சிந்தாமணி சிறப்பங்காடியின் கணக்குகள் 1976—77 வரையில் தணிக்கை செய்யப்பட்டிருக்கிறது. 1977—78 க்கு தணிக்கை முடியும் தருவாயில் உள்ளது.

(இ) தனிப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கை அறிக்கைகள் அவைமுன் வைக்கப்படுவது வழக்கமல்ல.

திரு. க. மருதாசலம் : பேரவைத் தலைவரவர்களே, கோவையிலுள்ள சிந்தாமணியினுடைய சிறப்பு அங்காடி தலைமை என்ற ஒன்றிருக்கிறது. அதற்குத் துணையாக 4, 5 இடங்களில் சிறப்பு அங்காடிகள் இருக்கின்றன. அவைகள் முழுவதற்கும் கணக்கை ஒன்றாக வைக்கிறார்களா என்பதை அறிய விரும்புவதோடு, அந்தத் தணிக்கை செய்யப்பட்டபோது முறைகேடுகள் ஏதாவது நடைபெற்றதாக அரசுக்குப் புகார்கள் ஏதாவது வந்துள்ளனவா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தணிக்கை அறிக்கையிலே எல்லா விவரங்களும் அடங்கி இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1979 எப்ரல் 26

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, தணிக்கை செய்வது என்பது கணக்குகளிலே இருக்கும்படியான குறைபாடுகளைக் கண்டுபிடித்து சரி செய்வதற்காக. ஆகவே குறைபாடுகள் இருக்கின்றனவா என்று ஏற்கனவே அங்கத்தினர் கேட்டார். அதற்கு கனம் அமைச்சர் அவர்கள் விடை அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, அந்தக் கோவை சிந்தாமணி அங்காடியில் முதலில் இருந்த டைரக்டர்ஸ் போர்டைக் கலைத்து, தனி ஆஃபீசர் நியமித்தார்களே, அதற்கு ஊழல்தான் காரணம் என்று சொல்லப் பட்டு, அதன்மீது விசாரணைகள் நடைபெற்றதாகவும் சொல்லப் பட்டு இருந்தது. அந்த விசாரணை என்ன ஆயிற்று? யார் அந்த ஊழல் பேர்வழிகள்? எவ்வளவு ஊழல்கள் நடந்தன? அதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்ற விவரங்களைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் இரண்டு விவரங்களைக் கேட்டிருக்கிறார். அந்தத் தணிக்கை அறிக்கையில் குறைபாடுகள் உண்டா என்று கேட்டிருக்கிறார்கள். குறைபாடுகள் உண்டு. அந்த விவரங்கள் தணிக்கை அறிக்கையிலே இருக்கின்றன, தனிக்கேள்வி போட்டால் நிச்சயமாக என்ன, என்ன குறைபாடுகள் இருக்கின்றன என்று சொல்ல கடமைப்பட்டிருக் கிறேன்.

இரண்டாவது விவகாரம், 1976 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10 ஆம் தேதியன்று, சிந்தாமணி கூட்டுறவு அங்காடி, அன்றைக்கு சில குறைபாடுகளுக்காக கலைக்கப்பட்டது. மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்று கேட்டிருக்கிறார்கள். மேல் நடவடிக்கை கள், குற்றம் செய்தவர்கள் மீது—உரிய நடவடிக்கைகள்— எடுக்கப் பட்டது. அதற்கான முழு விவரங்கள் தேவைப்பட்டால், தனிக் கேள்வி ஒன்றினைப் போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

குடந்தை சந்திரசேகரபுரம் கூட்டுறவு பண்டகசாலை

*வினா எண். 825—திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) 1977–78 ஆம் ஆண்டின் குடந்தை சந்திரசேகரபுரம் கூட்டுறவு பண்டகசாலையின் தணிக்கை அறிக்கை அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) அவ்வறிக்கை மீது Special report ஏதேனும் வரப் பெற்றுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பெற்ற நடவடிக்கை என்ன?